

# மியூஸீ மியூஸிக்கல்

## 175 வருடங்கள்...இன்னும் தொடர்கிறது



சென்னையில் உள்ள சத்தமிக்க பல குடியிருப்புகளில், ஒன்றுக்கு அப்பால், தூசி படிந்த வழிப்பாதையில் சென்றால், ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்ட மிகப் பழைய, காண்போரை கவரும் கம்பீரமான கட்டிடத்தைக் காணலாம் - மியூஸீ மியூஸிக்கல். அந்த இசைக் கூடத்தின் மகத்தான கதவுகள் பார்ப்போரை ஆச்சரியப்பட வைக்கும். அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி திரு.கிஷோர் தாஸ், அந்த காலத்தில் பார்த்தசாரதி கோவிலின் யானைகள் தங்கும் இடமாக அந்த கட்டிடம் இருந்தது என்று சொன்ன போது நம் ஆச்சரியம் தீர்ந்தது. வெளியில் இருக்கும் தகவல் பலகையில், அந்த கட்டிடத்தைப் பற்றி வந்த நாளிதழ் மற்றும் பத்திரிகை செய்திகள்,




அக்கால, இக்கால இசை கலைஞர்கள் பற்றிய தொகுப்பு, இசை நிகழ்ச்சி அழைப்புகள் ஆகியவற்றைக் காணலாம்.

சந்தனம், ஜவ்வாது, கற்பூரம் ஆகியவற்றின் நறுமணம் கோவிலை நினைவூட்டினால், மியூஸீ மியூஸிக்கலும் அதற்கு சளைத்தது அல்ல. அழகாக வடிவமைக்கப்பட்டு பிரகாசமாக இருக்கும் கண்ணாடி சட்டத்தில் தொங்கும் பளபளக்கும் இசைக் கருவிகளிலிருந்து வரும் பைன் எண்ணெய், மரம் மற்றும் தோல் பூச்சின் மணம் உள்ளே செல்பவரை பரவசப்படுத்தும். வரவேற்பறையில் உள்ள காசாளர் பின்னிருக்கும் பழைய, பூச்சி அரிக்கப்பட்ட அடுக்கு, ரசனையுடன் கச்சிதமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. நுழைவாயில் அறையில், தலைக்கு மேலே தொங்கும் பல நூறு பானைகளைக் கொண்டு செய்யப்பட்ட விளக்கு, அந்த இசைக் கூடத்தின் ஒலியியலை சமநிலையில் வைத்துள்ளது போலும்! நுழைவாயிலைத் தொடர்ந்து அங்கு இருக்கும் பிரம்மாண்டமான பியானோவில் யானை தந்தத்தை ஒத்த விசைப்பலகை நம் கண்கள் நிலை குத்தி நின்று விடும். இரண்டு அழகான புதுப்பிக்கப்பட்ட தூண்கள் தாங்கும் இடைமட்ட மாடியில் பளிச்சென இருக்கும் அலமாரியில், வயலின், கிட்டார், சாக்ஸபோன் ஆகிய கருவிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்த மாடிக்கு செல்லும் சுழற் படிக்கட்டில் ஏறி மேலே சென்றால், அங்கு இருக்கும் அபூர்வ விதவிதமான கருவிகளைப் பார்த்து நாம் மலைத்தே போவோம்.

அந்த கூடத்தின் காட்சியும், அங்கு வரும் சத்தமும், நம் சுவாசக்காற்றும் எத்தனையோ இசை ஜாம்பவான்களின் இசை பயணத்தின் ஆரம்பம், அவர்களின் கனவுகள், லட்சியம் ஆகியவற்றை நமக்கு நினைவூட்டுகிறது. திரு.கிஷோர் தாஸ் அவர்கள் மிக சந்தோஷமாக 175 வருடங்கள் பழமையான மியூஸீ மியூஸிக்கல் நிறுவனத்தின் வரலாற்றை நமக்கு விளக்கினார்.

1842-ஆம் ஆண்டு நீலகிரி பிரதேசத்தில் மிஸ்கித் என்ற போர்ச்சுகீஸ் இசை காதலனால் தொடங்கப்பட்டு, அதற்கு பின் அவர் ஒருவராகவே வீடுகளிலும், தேவாலயத்திலும் பியானோக்களைப் பழுது பார்க்கும் வேலை செய்து வந்தார். இந்தியா மற்றும் லஹோர், பினாங் போன்ற இடங்களிலும் இவர் பணி தொடர்ந்தது. சிறிது காலம் ஜெர்மன் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு, பின் ப்ருதோம்-ஏமி ரோஸாரியோ  என்ற பிரான்ஸ்-ஸ்பெயின் நாட்டை சேர்ந்த இருவர் தமக்கு சொந்தமாக்கிக் கொண்டு ‘மியூஸீ






மியூஸிக்கல்' என்று பெயரிட்டனர். இவர்கள் தலைமையில் தான், பழுது பார்க்கும் பணியோடு, இசை கருவிகள் விற்பனையும் தொடங்கியது.

1940-ல் சுதந்திர போராட்ட சமயத்தில், அப்போது இருந்த நிதி இயக்குனரான திரு.கிரீதர் தாஸ் இந்த நிறுவனத்தைத் தானே வாங்கி, மியூஸீ மியூஸிக்கலின் முதல் இந்திய உரிமையாளர் ஆனார். சுதந்திரத்திற்குப் பின் அரசாங்கம், அயல்நாட்டு கருவிகளை ஆடம்பர பொருட்கள் என்று வகைப்படுத்தி  வரி போட்ட போது, இசைக்கு சேவை செய்யும் ஒரே நோக்கத்தோடு இந்த நிறுவனம் இசைக் கருவிகளை குறைந்த விலைக்கு வாடகைக்கு விட்டும், இந்திய இசைக் கருவிகளை விற்கவும் செய்தது. இந்த நிறுவனம் 1966-ல் இசை பள்ளி ஒன்றைத் தொடங்கியதோடு, லண்டனில் உள்ள ட்ரினிடி இசை கல்லூரியோடு இணைந்து, தேர்வு நடத்தி சான்றிதழ் வழங்குகிறது.
மியூஸீ மியூஸிக்கல் இருபது வருடங்களாக, இசை துறையில் பெற்ற நிபுணத்துவம் கொண்டு மேற்கத்திய கருவிகளை இந்தியாவிலேயே செய்யத் துவங்கியது. இசை கருவிகளையும், அதன் பாகங்களையும் இறக்குமதி செய்து வந்த நிறுவனம், இன்று இசை தொடர்பான அனைத்தையும் ஏற்றுமதி



செய்யும் அளவுக்கு உயர்ந்து சர்வதேச இசையில் சென்னைக்கு ஒரு சிறப்பு அங்கீகாரம் கொடுத்துள்ளது.

இசை கலைஞர்களுக்கு ஆதரவு கொடுக்கும் வகையில், எம்.எஸ்.சுப்புலட்சுமி, உஸ்தாத் படே குலாம் அலி, உஸ்தாத் பிஸ்மில்லா கான், பண்டிட் ரவி ஷங்கர் ஆகியோரின் உள்நாட்டு வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் கருவிகளை சரி பார்த்துக் கொடுப்பதை தொடர்ந்து செய்து வந்தனர். அவர்களுக்கு நெருக்கமான வீணா பாலசந்தர், சிட்டிபாபு, விக்கு விநாயக்ராம், மாண்டலின் சீனிவாஸ், ட்ரம்ஸ் சிவமணி அவர்களுக்கும் இதே சேவை செய்தனர்.
இதைத் தவிர, இசை நாட்டம் உள்ளவர்களை நாடி அவர்களுக்கு இசை நுணுக்கங்களை சொல்லிக் கொடுத்து, அவர்களின் இசைத் திறமையை பக்குவப்படுத்தி, சர்வதேச அளவில் அவர்களுக்கான ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். மாஸ்ட்ரோ இளையராஜா மேற்கத்திய இசை படிக்கவும், ஆஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர்.ரஹமான் தன் திறமையை மேம்படுத்தவும், இசை உலகில் சிறுவனான அனிருத் - ஆகிய அனைவரும் மியூஸீ மியூஸிக்கலில் தேர்வு எடுத்த மாணவர்களே ஆவர்.

திருமதி.எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் வாசித்த பழைய கால ஸ்டெயின்வே பியானோ, நோபல் விருது பெற்ற ரபீந்திரநாத் தாகூர் வாசித்த பியானோ, டில்லியில் உள்ள விமானப் படை அலுவலர் சங்கத்தில் இருந்த பியானோவை எல்லாம் சரி பார்த்த பெருமை இந்த இசைக் கூடத்துக்கு உண்டு. தேர்ந்த இசை நிபுணர்களுக்கு இசைக் கருவிகள் விற்பனையும், இசை சேவை செய்வதுமே அவர்களின் முக்கிய பணியாகினும், மியூஸீ மியூஸிக்கல் தங்கள் பெருமையாக கருதுவது இசையை பல தரப்பட்ட சமூகத்துக்கு எடுத்து சென்று ஒரு முழுமுதற் கல்வியை கொடுத்து இசை மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும். இன்று அவர்களின் முக்கிய வாடிக்கையாளர்களாக இருக்கும் புகழ் பெற்ற மருத்துவர்கள், தொழில் நிறுவன அதிகாரிகள் இங்கு மாணவர்களாக சேர்ந்து இசையைக் கற்று இன்று அதே இசையை பொழுதுபோக்காகவும், ஆன்மீகமாகவும் கொண்டுள்ளனர். பல மாணவர்கள் இசையை சிகிச்சைக்கான ஆய்வு செய்கின்றனர்.

இந்த நிறுவனம் இசை திறமை உள்ளவர்களைக் கண்டுபிடிப்பதும், தன் மாணவர்களின் இசைத் திறமையை வெளிப்படுத்த பல நிகழ்ச்சிகள் நடத்துவதும், இசையை அவர்களின் வாழ்க்கைக் கல்வியாகக்  கொள்ள ஊக்குவிப்பதுமான தொண்டை செய்து வருகின்றனர்.
மியூஸீ மியூஸிக்கல் தம் வாடிக்கையாளர்களை எல்லா இசை கருவிகளையும் வாசிக்க செய்து அவர்களுக்கு ஏற்ற ஒன்றை தேர்ந்தெடுக்க ஊக்குவிப்பதை, தங்களின் தனித் தன்மை என்று பெருமிதம் கொள்கின்றனர். இந்த நிறுவனம் இசை ஆர்வம் உள்ள ஏழை மாணவர்களைக் கண்டு, அவர்களுக்கு உதவித்தொகை கொடுத்து, புகழ் பெற்ற இசை கலைஞர்களுடன் உரையாட வைப்பதையும் செய்கிறார்கள். இதோடு வெளி நாட்டிலிருந்து இசை குழுக்களை அழைத்து வந்து கூட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம், பல நாட்டு இசைக் கல்வியை பரப்புகிறது.

இசை கருவிகள் விற்பனை, இசை கருவிகள் செய்வது, இசை கலைஞர்களை ஊக்குவிப்பது, இசை நிகழ்சிகள் நடத்துவது என இசைத் துறையில் மியூஸீ மியூஸிக்கல் தனக்கென ஒரு முத்திரை பதித்துள்ளது.
இசைத் துறையில் தன்னலமற்ற சேவை செய்வதில், மியூஸீ மியூஸிக்கல் ஒரு சிறந்த நிறுவனமாக விளங்குகிறது.